**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஈரோடு**

முன்னிலை : திரு.R.வாஞ்சிநாதன்., B.A.,B.L.,(Hons).,L.L.M.,P.G.D in J.J & J.P

நீதித்துறை நடுவர் எண்.1, ஈரோடு

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 10–ம் நாள் செவ்வாய்க்கிழமை

(2057 திருவள்ளுவராண்டு, விசுவாவசு வருடம், மாசி மாதம் 26–ம் நாள்)

**CNR.No.TNED040173112024**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.837/2024**

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
கருங்கல்பாளையம் காவல் நிலையம், ஈரோடு,
குற்ற எண்.208/2023 ... குற்றமுறையீட்டாளர்

/ எதிர்/

A1) அஜித்குமார் (எ) அஜித் (வயது 27/2026) (split–up in C.C.No. 247/2026),
த/பெ. அன்சர்பாட்ஷா,
54 புதுமை காலனி, ஈரோடு.
தற்போது நாடார் மண்டப வீதி,
KNK ரோடு,
கருங்கல்பாளையம்,
ஈரோடு.

A2) சுதர்சன் (வயது 24/2026),
த/பெ. சக்திவேல்,
17 ரங்கவீதி,
KNK ரோடு,
கருங்கல்பாளையம்,
ஈரோடு. ... குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்

இவ்வழக்கானது கடந்த 21.11.2024–ம் தேதி, C.C.No.837/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டும், 1–ம் எதிரிக்கு எதிரான வழக்கு கடந்த 10.03.2026–ம் தேதி தனியாக C.C.No.247/2026ஆக தனியாக பிரிக்கப்பட்டும், 2–ம் எதிரிக்கு எதிராக வழக்கை தொடர்ந்து நடத்த உத்தரவிடப்பட்டும், 2–ம் எதிரிக்கு எதிராக அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை 2 திருமதி.N.அனிதா அவர்கள் ஆஜராகியும், குற்றஞ்சாட்டப்பட்ட 2–ம் எதிரி தரப்பில் திரு.G.தங்கபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பும் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இதுநாள்

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 14:43:46 +0530

வரை பரிசீலனையிலிருந்து வந்து இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும்,

**–தீர்ப்புரை–**

இந்த வழக்கு குற்ற விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 173(2) இன் படி தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்காகும்.

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :**

கடந்த 08.06.2023–ம் தேதி, பகல் 11.00 மணிக்கு, ஈரோடு காவேரி ரோட்டில் உள்ள காவேரி மார்பிள் கடைக்கு முன்பாக சாட்சி–1 ரங்கராஜ் நடந்து சென்று கொண்டிருந்தபோது 1 மற்றும் 2–ம் எதிரிகள் சாட்சி–1 ரங்கராஜை வழி மறித்து பணம் கேட்கவே சாட்சி ரங்கராஜ் மறுத்தபோது 1 மற்றும் 2 எதிரிகள் சாட்சி ரங்கராஜிடம் ரூபாய் 15,000/–ம் பெறுமானமுள்ள VIVO செல்போனை வழிப்பறி செய்துள்ள குற்றத்திற்காக எதிரிகள் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 387–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கருங்கல்பாளையம் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. குற்ற இறுதி அறிக்கை மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்களையும் குற்ற அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களையும் பரிசீலனை செய்து பார்த்ததில், எதிரிகளுக்கு எதிராக புலன் கொள்ளக்கூடிய குற்றங்கள் விசாரணைக்கு எடுக்க முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால், எதிரிகளுக்கு எதிராக இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 387–ன் படியான குற்றங்களை விசாரணைக்கு எடுத்து குற்ற விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 190 (1) (b)–ன் படி உத்தரவிடப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 14:43:51 +0530

3. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு வழக்கில் உள்ள ஆவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 207 குற்ற விசாரணை நடைமுறை சட்டத்தின் படி இலவசமாக வழங்கப்பட்டன.

4. போதிய அவகாசம் கொடுக்கப்பட்டு குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 240(1)–ன் படி எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 387–ன் கீழ் குற்றச்சாட்டை வனைந்து வாசித்து விளக்கிக் கூறி வினவியபோது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றச் சாட்டினை மறுத்த காரணத்தினால் குற்ற விசாரணை நடைமுறைச் சட்டம் பிரிவு 242–ன் படி அரசு தரப்பில் சாட்சிகளை விசாரிக்க உத்தரவிடப்பட்டது.

5. அரசுதரப்பில் சாட்சிகளை விசாரிக்க உத்தரவிடப்பட்டிருந்தபோது, 2–ம் எதிரி தன்னிச்சையாக குற்றத்தை ஒப்புக்கொள்வதாக தாக்கல் செய்த குற்ற ஒப்புதல் மனு எண். M.P.No.3/2025 அனுமதிக்கப்பட்டு, 1–ம் எதிரிக்கு எதிரான வழக்கு C.C.No.247/2026ஆக பிரிக்கப்பட்டுள்ளது. எனவே 2–ம் எதிரியின் தன்னிச்சையான குற்ற ஒப்புதலை கருத்தில் கொண்டு 2–ம் எதிரி இந்திய தண்டனை சட்டம் பிரிவு 387–ன் படி குற்றவாளி என இந்நீதிமன்றம் தீர்மானித்து, 2–ம் எதிரிக்கு இந்திய தண்டனை சட்டம் பிரிவு 387–ன் கீழான குற்றச்சாட்டிற்க்கு 8 மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை மற்றும் ரூ.100/– அபராதம் விதித்தும், அபராதத்தை கட்டத்தவறும் பட்சத்தில் ஒரு வாரம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், குற்ற விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 248(2) இன்படி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. 2–ம் எதிரி ஏற்கனவே சிறையில் இருந்து காலமான 08.06.2023 முதல் 11.08.2023 மற்றும் 24.09.2025 முதல் 10.03.2026 வரை உள்ள நாட்களை (233 நாட்கள்) கு.வி.மு.ச பிரிவு

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 14:43:57 +0530

428–ன் கீழ் கழித்துக்கொள்ள இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. 2–ம் எதிரிக்கு தீர்ப்பின் நகலை இலவசமாக வழங்க கு.வி.மு.ச பிரிவு 363–ன் படி உத்தரவிடப்படுகிறது.

6. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட பி.ஆர்.எண்.81/2024–ல் உள்ள VIVO செல்போன் ஒன்று குறித்து 1–ம் எதிரிக்கு எதிராக நிலுவையில் உள்ள CC.No.247/2026–ல் உத்தரவு பிறப்பிக்கப்படும்.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, மீண்டும் என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 10–ம் நாளான இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 14:44:02 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
ஈரோடு

**இணைப்பு.** இல்லை

**குறிப்பு.**

1 2–ம் எதிரி விசாரணைக்காலத்தில் சிறையில் இருந்துள்ளார்.
2. எந்த சாட்சியும் விசாரிக்கப்படவில்லை.
3. 2–ம் எதிரிக்கு விதிக்கப்பட்ட தண்டனையை 2–ம் எதிரி சிறையில் இருந்த காலத்தில் இருந்து கழித்துக்கொள்ள கு.வி.மு.ச பிரிவு 428–ன் படி உத்தரவிடப்படுகிறது.
4. தீர்ப்புரை குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
5. இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 387–ன் கீழ் விதிக்கப்பட்ட அபராத் தொகை ரூ.100/–யை 2–ம் எதிரி செலுத்திவிட்டார்.
6. 2–ம் எதிரி சிறையிலிருந்துள்ள மொத்த நாட்கள் 233 நாட்கள்

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.03.10 14:44:07 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
ஈரோடு